1987 மார்ச் 28]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்பொழுது மதுரை மாவட்டம் வாடிப் பட்டி வட்டம் சோழவந்தான் நகரில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தானைச் சுற்றிப் பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. சோழவந்தான் தொகுதியில் இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் சோழவந் தானில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் ஏற்படுத்தினால் அங்குள்ள பல்வேறு கிராமங்களிலுள்ள வேலையற்ற வாலிபர்களுக்கு வேலை வாய்ப்புப் பெற, பயிற்சி பெற, உதவிகரமாக இருக்கும். இப்போது அங்குள்ளவர்கள் மதுரை, திண்டுக்கல் போன்ற இடங்களுக்கு போக வேண்டியிருப்பதால் ஒரு தொழிற் பயிற்சி நிலையத்தை சோழவந்தான் நகரில் அரசு அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் தற்போது முறையே மதுரை, தேனி, செக்கானூரணி ஆகிய இடங்களில் ஏற்கெனவே தொழிற் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. எனவே புதிதாக சோழவந்தானில் ஆரம்பிக்கின்ற உத்தேசம் இல்லை.

பட்டுக்கோட்டை நகராட்சியில் திருமணக் கூடம்.

213—(*வினா எண் 3885) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை நகராட்சியில் திருமணக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தற்சமயம் இல்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை விரைந்து பெருகி வருகின்ற நகரமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கேயிருக்கின்ற தனியார் திருமணக் கூடங்களில் ஏறத்தாழ ஐயாயிரம் ரூபாய், ஆறாயிரம் ரூபாய் என்று திருமணத்திற்கு ஒரு நாளைக்கு வாடகை வசூலிக்கிறார்கள். இதைக் கருத்திற்கொண்டு இனி வருகின்ற ஆண்டுகளிலேயாவது—இந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் அல்லது மைய அரசு கூட அண்மையில் 55 இலட்சம் ரூபாயைப் பட்டுக்கோட்டை நகராட்சி வளர்ச்சிக்காக அளித்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள்—இதையெல்லாம் கொண்டு அந்த நகரத்திற்கு ஒரு திருமணக் கூடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அமைச்சரவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் திருமணக் கூடம் கட்ட கடன் உதவி அளிப்பதில்லை என்று நகர் ஊரமைப்பு இயக்குநர் தெரிவித்துள்ளார். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

தமிழகத்தில் குறைந்த வருவாயுடைய நகராட்சிகள்

214—(*வினா எண் 5277) *திரு. க. பாலசுப்பிரமணியன்:* மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மிகவும் குறைவான வருவாயை உடைய நகராட்சிகள் எத்தனை இருக்கின்றன?

(ஆ) அவைகளின் வருவாயைப் பெருக்குவதற்கு அரசு எடுத்துக்கொண்ட மாற்று ஏற்பாடு என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தமிழகத்தில் மிகவும் குறைவான வருவாயை உடைய நகராட்சிகள் 13 உள்ளன.

(ஆ) இந்த நகராட்சிகள் யாவும் மூன்றாம் நிலையில் உள்ளன. இவைகளின் ஆண்டு வருமானம் 30 இலட்ச ரூபாய்க்கும் குறைவாக உள்ளது. இந்நகராட்சிகளில் அபிவிருத்தித்